**ந.க.எண். 509/2022/இ1**

**நகராட்சி அலுவலகம்,**
**கூடலூர்.**
**நாள்:–23.01.2023**

**<u>அவசரக்கூட்ட அழைப்பிதழ்</u>**

திருவள்ளுவர் ஆண்டு, சுபகிருது வருடம் தை திங்கள் 10–ஆம் நாள் (ஜனவரி மாதம் 24–ஆம் நாள்:–24.01.2023) செவ்வாய்க்கிழமையன்று காலை 11.00 மணியளவில் கூடலூர் நகராட்சி நகர்மன்றக்கூட்ட அரங்கில் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் அவசாரக்கூட்டம் நடைபெற உள்ளது. அது சமயம் அக்கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**நகர்மன்றத்தலைவர்**
**கூடலூர் நகராட்சி**

**பொருள்.1**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 10.01.2023ம் தேதிய ந.க.எண்.35945/2022/EA2- SWM-20 உத்திரவில் கூடலூர் நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் குப்பைகள் உருவாகும் இடங்களிலேயே மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து சேகரம் செய்து மறு சுழற்சி செய்யும் இடத்திற்கு கொண்டு வர ஒரு டன்னிற்கு ரூ.4,071.51 என நிர்ணயம் செய்து இது குறித்து நிர்வாக அனுமதி வழங்கி ஒப்பந்த நிறுவனத்தை மூன்று ஆண்டுகளுக்கு தேர்வு செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது.

இப்பணியை மேற்கொள்ள கூடலூர் நகராட்சிக்கு ஆண்டு ஒன்றிற்கு சுமார் ரூ.225.86 லட்சம் செலவாகும் எனபதினால் இத்தொகையை பொது நிதி மற்றும் 15 CFC SBM Tied Grant-லிருந்து செலவு மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், இதன் பொருட்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்த நிறுவனத்தை தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரவும், இதன் பொருட்டு ஏற்படும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**(ந.க.எண்.1965/2021/எச்1)**

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.347,அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்/–)லோ.பத்மாவதி**
**நகர்மன்றத்தலைவர்**
**கூடலூர் நகராட்சி**